

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, மதச்சார்பற்ற கூட்டணியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, பெரும்பேர்கண்டிகை கிராமத்தில், முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற தி.மு.க. கொறடாவுமான எ.வ.வேலு வீதி, வீதியாக வாக்குசேகரித்தார். உடன், மாவட்டச் செயலாளர் சுந்தர், செல்வம் எம்.பி., கழக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் பலர் உள்ளனர்.

தி.மு.க. எடுக்கும் மக்கள் நலன் சார்ந்த அனைத்து முடிவுகளுக்கும்

மனிதநேய ஜனநாயக நீதிக்கட்சி ஆதரவாக செயல்படும்!

நிறுவனத்தலைவர் கோவை இல்முதின் அறிக்கை!

சோவை, செப். 30-

தமிழ்நாட்டின் முன்னேற்றம் மற்றும் சமூக நீதிப் பாதுகாப்பிற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து செயல்பட மனிதநேய ஜனநாயக நீதிக்கட்சி முடிவெடுத்து ஆதரவு வழங்குவதாக அதன் தலைவர் கோவை இல்முதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

வணக்கம். தமிழக மண்ணில் சமூக நீதியையும், மதச்சார்பற்ற நல்லிணக்கத்தையும், சமத்துவத்தையும் நிலைநிறுத்துவதில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றி வரும் பேரியக்கப் பணிகள் போற்றுதலுக்குரியவை.

மாநிலத்தின் உரிமைகளைப் பாதுகாக்கவும், எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், சனாதன மற்றும் பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக ஒரு வலுவான முற்போக்குக் கூட்டணி அமைவது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

மக்களுக்கான இந்த உன்னதப் பயணத்தில், கொள்கை ரீதியாக ஒத்த கருத்துடைய இயக்கங்கள் கைகோர்த்துச் செயல்படுவது தமிழகத்தின் எதிர்காலத்திற்கு வலிமை சேர்க்கும் என எங்கள் இயக்கம் திடமாக நம்புகிறது.

அதன்படி, மனிதநேய ஜனநாயக நீதிக்கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் உன்னதக் கொள்கைகளையும், மக்கள் நலத் திட்டங்களையும் முழுமையாக ஆதரிப்பதோடு, உங்களோடு இணைந்து அரசியல் மற்றும் சமூகத் தளங்களில் கூட்டாகச் செயல்பட ஒரு மனதாக முடிவெடுத்துள்ளது என்பதை இக்கடிதத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களது முதன்மையான நோக்கங்கள்:

மதநல்லிணக்கப் பாதுகாப்பு: தமிழகத்தின் அமைதியையும், பன்முகத்தன்மையையும் சிதைக்க நினைக்கும் சக்திகளுக்கு எதிராக ஒன்றிணைந்து நிற்பது.

மக்களுக்கான கூட்டுப் பணி: அடித்தட்டு மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உரிமைகளுக்காகக் களத்திலும், மக்கள் மன்றத்திலும் இணைந்து குரல் கொடுப்பது.

மாநில சுயாட்சி முழக்கம்: தமிழகத்தின் தன்னாட்சி உரிமைகளை மீட்டெடுக்க உங்களது கரங்களை வலுப்படுத்துவது.

இனிவரும் காலங்களில், திராவிட முன்னேற்றக் கழகம் எடுக்கும் மக்கள் நலன் சார்ந்த அனைத்து முடிவுகளுக்கும், முற்போக்குச் சிந்தனைமிக்க நடவடிக்கைகளுக்கும் மனிதநேய ஜனநாயக நீதிக்கட்சி ஒரு தோழமைச் சக்தியாக என்றும் தோளோடு தோள் நின்று செயல்படும் என உறுதி கூறுகிறோம்.

தமிழகத்தின் விடியலுக்காகவும், சமூக நீதியின் தொடர் வெற்றிக்காகவும் இரு இயக்கங்களின் இந்த இணக்கம் புதிய வரலாற்றுப் பாதையை வகுக்கட்டும்! 'சமூக நீதி வெல்லட்டும்! மனிதநேயம் நிலைக்கட்டும்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பி.கே. சேகர்பாபு தலைமையில் மதுராந்தகம் தொகுதியில்

கழக வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு வாக்கு சேகரிப்பு!

கழக துணை அமைப்பு செயலாளர் ப.தாயகம் கவி மேற்கொண்டார்!

மதுராந்தகம், செப்.30-

மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு அவர்களின் தலைமையில்,

சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் வடக்கு ஒன்றியம், குன்னவாக்கம் பகுதியில் பாகம் எண்:58ல் பாக பொறுப்பாளர் திரு. வி.க.நகர் தொகுதியின் 72 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.சரவணன், பாக முகவர் விஜயகுமார், கிளை செயலாளர் சுதேஷ் ஆகியோர் முன்னிலையில்

கழக துணை அமைப்பு செயலாளர் முன்னால் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு அப்பகுதி வாழ் மக்களிடம் திண்ணை பிரச்சாரம் மேற்கொண்டார்.

வழக்கறிஞர்கள் விஜய மகேந்திரன், ரிஸ்வான், ஆனந்தன்,ஹரிஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ. பரந்தாமனை ஆதரித்து பேரவை துணைத் தலைவர் இரா.பொன்ராம், மாநிலத் தலைவர் ராஜா குப்புசாமி தலைமையில் அமைப்பு சாரா தொ.மு.ச. மாநில பிரச்சாரச் செயலாளர் ஏ.ஏ.ஆறுமுகம், தொழிலாளர்களிடையே வாக்கு சேகரித்தனர். இதில் தொ.மு.ச. நிர்வாகிகள் த.பத்மநாதன், பெப்சி. கண்ணன், த.ரவி, காஞ்சிபுரம் தொ.மு.ச. போக்குவரத்து பொதுச் செயலாளர் க.செல்வராஜ், சென்னை கவுன்சிலிங் பொருளாளர் கண்ணன், சுடர்மணி ராஜா, ராஜ்குமார், வி.ராஜேந்திரன், ராஜன் சுவாமிநாதன், வி.சந்திரசேகர், சிந்தாமணி அலிசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட அணிகள் சார்பில் மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர். விஜய், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.எச்.ரஹ்மத்துல்லா, மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் யோகேஸ்வரி சுந்தரேசன், மகளிர் தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் டி.கே. லதா ஃப்ளாரான்ஸ் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம், வெள்ளப்புத்தூர் ஊராட்சி, பாகம் எண்.43ல் வசிக்கும் பொதுமக்களை நேரில் சந்தித்து வீடுவீடாகச் சென்று வேட்பாளர் இ. பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இதில் வெள்ளப்புத்தூர் கிளை கழகச் செயலாளர் ஏழுமலை, டில்லிபாபு, கருணாகரன், தமிழ்மணி. ஜான் பாட்சா, சீனிவாசன், பகுதி அமைப்பாளர் ஜி.எம்.ஸ்ரீதரன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

நேபாளத்தில் நிலச்சரிவு வீடியோ வெளியீடு!

காத்மாண்டு, செப்.30-

நேபாளத்தில் வெள்ள பாதிப்புகள் தொடர்ந்து வரும் நிலையில், இயற்கை அங்கு எந்தளவுக்கு கொடூரமாக இருக்கிறது என்பதை காட்டும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. வெறும் ஆறே நொடிகளில் ஒட்டுமொத்த மலையும் சரிந்து விழும் காட்சிகள் சமூக வலைதளங்களில் பரபரப்பை கிளப்பியுள்ளது.

நேபாளத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு மற்றும் பனிச்சரிவு சம்பவங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இதில் இரண்டு வெவ்வேறு இடங்களில் எடுக்கப்பட்ட வீடியோக்கள் தற்போது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. அதில் சுமார் 6 விநாடிகளில் மலைப்பகுதிகள் அப்படியே சரிந்து விழும் காட்சிகள் பதிவாகியுள்ளன. மலை சரிவதை பார்த்த மக்கள் அச்சத்தில் கதறி அழுவது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முதல் வீடியோ முதல் வீடியோ மஸ்டாங் மாவட்டத்தின் லேட் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை வெள்ளம் ஏற்பட்ட போது எடுக்கப்பட்டது. திடீர் வெள்ளத்தால் நிலச்சரிவு ஏற்பட்ட போது மலையின் பெரிய பகுதி ஒன்று கீழே உள்ள காளிகண்டகி ஆற்றுக்குள் சரிந்து விழுவது தெரிகிறது. சுமார் 6 விநாடிகளில் மண் மற்றும் பாறைகள் வேகமாக ஆற்றில் சரிந்து விழுகின்றன. இதை பார்த்த அப்பகுதி மக்கள் அச்சத்தில் அலறும் சத்தமும் பதிவாகியுள்ளது. சார்தம் புனித யாத்திரை சென்றவர்கள் இந்த வீடியோவை எடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதி சரிந்து விழுந்ததால் காளிகண்டகி ஆற்றின் பாதையே சற்று நேரம் முடங்கியது.. பின்னர் நீர், குவிந்திருந்த இடிபாடுகளுக்கு நடுவே புதிய பாதையை உருவாக்கி மீண்டும் ஓட தொடங்கியது. இவை அனைத்துமே அந்த வீடியோவில் மிக தெளிவாக பதிவாகியுள்ளது.

திருத்தணியில்

டிரான்ஸ்பார்மர் சாய்ந்து இரவு முழுவதும் மின்தடை!

திருத்தணி, செப். 30-

திருத்தணி குமரன் நகரில், நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால், மின்மாற்றி ஒன்று அடியோடு சாய்ந்ததால், அப்பகுதியில் 18 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

திருத்தணி நகராட்சி, முருகப்ப நகர் பகுதியில், குமரன் தெருவின் கடைசி பகுதியில் மழைநீர் கால்வாய் அருகே மின்மாற்றி அமைத்து, குமரன் நகர், முருகப்பநகர் விரிவாக்கம் ஆகிய பகுதிகளில், 150 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. மேலும், நகராட்சியின் ஆழ்துளை கிணற்றின் மின் மோட்டாருக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு 9:30 மணிக்கு மேல், ஒன்றரை மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதனால், மழைநீர் கால்வாயில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

அதில் கால்வாய் சேதமடைந்து, வெள்ளம் மின்மாற்றி இருந்த பகுதியில் சென்றது. இதனால், மின்மாற்றியின் கம்பங்கள் அடியோடு சாய்ந்து, அங்குள்ள மரத்தின் மீது விழுந்தது.

இதையடுத்து, அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தொடர்ந்து, நேற்று காலை 8:00 மணிக்கு, திருத்தணி மின்வாரிய அதிகாரிகள் மற்றும் 15க்கும் மேற்பட்ட மின் ஊழியர்கள், பொக்லைன் இயந்திரத்துடன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, சாய்ந்த மின் மாற்றியை அப்புறப்படுத்தினர்.

பின், முருகப்ப நகர் பகுதியில் புதிய மின்மாற்றி அமைத்து, மாலை 3:30 மணிக்கு குமரன் தெரு மற்றும் முருக்கப்ப நகர் விரிவாக்கம் பகுதிகளுக்கு, மின்சாரம் வினியோகம் செய்யப்பட்டது. 18 மணி நேரத்திற்கு மேல் மின் வினியோகம் துண்டிக்கப்பட்டதால், அப்பகுதி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

ராமப்பொருத்தம்...



தன்னை
எம்.பி.
எம்.எல்.ஏ. என வெற்றி பெற
வைத்து

பல வாய்ப்புகளை தந்த
கட்சி

ஆட்சிக்கு வரவில்லை
என்றதும்

மக்கள் தந்த
எம்.எல்.ஏ. பதவியை ஒரு
மாதத்துக்குள்
ராஜினாமா
செய்துவிட்டு

ஆட்சியை பிடித்த
புதுக் கட்சியிடம் அடகு
போயிருப்பவர்

இப்ப அந்த
ஆளுங்கட்சியின் சார்பில்
மீண்டும் இடைத்தேர்தல்
வேட்பாளர் என்றால்...

2021-2026 வரை
எம்.எல்.ஏ.வாக
இருந்த தனக்கு தனது
கட்சி
சீட்டு தரவில்லை
என்றாலும்
விசுவாசத்தோடு அமைதி
காத்த ஒருவர்

இப்ப எதிர்க்கட்சிக்கு
வேட்பாளர்..

ஆம்...

முன்னவர் த.வெ.க.வின்
மரகதம் குமரவேல்.

பின்னவர் தி.மு.க.வின்
இ.பரந்தாமன்

இப்பச்
சொல்லுங்க...

ஏரி காத்த
ராமர் ஊர்
மதுராந்தகத்துக்கு

பொறுமை காத்த
பரந்தாமன் தானே
பொருத்தமானவர்..

வாக்களிப்பீர்

உதயசூரியன்.

என்னநாஞ் சொல்றது



மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு கழகத்தின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, பாகம் 141–ல் ஒதுக்கப்பட்டுள்ள, செம்பூண்டி ஊராட்சியில் சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மீ .வே. கருணாகரன் தலைமையில், ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைபடி, கினார் ஊராட்சி, கே. கே.புதூர், 243 பாகப் பொறுப்பாளர்கள் செம்பாக்கம் வடக்கு பகுதிச் செயலாளர் பல்லாவரம் ஏ.கே.கருணாகரன், தாம்பரம் கிழக்கு பகுதிச் செயலாளர் மாடம்பாக்கம் ஆ.நடராஜன் ஆகியோர் தலைமையில் புஷ்பராஜ், வைலட் ராணி, அஜித், சி.ஆர். நரேஷ்குமார், கே.பிரபு, ஆர். ராதாகிருஷ்ணன், எம்.ஐ.டி.இ.சுரேஷ், பொண்.சதாசிவம், சாம்சன், கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.